ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1396/4 - 2005 ජූනි 06 වැනි සඳුදා - 2005.06.06
1396/4 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி. - பி 21/78

### 978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 24அ (2) மற்றும் 24ஆ என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2005, மே 26.

### கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2005.03.14 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 24ஆ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 2005.06.03 ஆந் திகதிய 1395/22 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையால் அங்கீகரிக்கப்பட்டதுமான சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு (இதனகத்துப் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. சொல்லப்பட்ட கட்டளையின் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சுவாமி விபுலானந்த இசை, நடனக் கல்லூரியில் கற்கை நெறியொன்றிற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர் ஒவ்வொருவரும் அவரது பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்வதன்மேல் சொல்லப்பட்ட பல்கலைக்கழகத்தின் பெயரில் விடயத்திற்கேற்ப, பட்டம் அல்லது டிப்ளோமா வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் நிறுவகமானது சொல்லப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் ஏதேனும் பட்டத்தை அல்லது வேறு கல்விசார் சிறப்புப் பட்டத்தை வழங்குவதற்குத் தகுதியுடையதாதலும் ஆகாது ;

ஆயினும் எவ்வாறாயினும், மாணவர் ஒவ்வொருவரும் சொல்லப்பட்ட கட்டளையின் திகதிக்கு நேரமுந்திய நாளன்று சொல்லப்பட்ட கல்லூரியின் மாணவர் ஒருவராக அவரால் துய்க்கப்பட்ட வசதிகளையும் சிறப்புரிமைகளையும் தொடர்ந்து துய்த்தல் வேண்டும்.

4. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் (இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகத்தினதும் தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் அமைய நிறுவகமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) மாணவர்களை அனுமதிப்பதற்கு ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் ஒருப்பாட்டுடன் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய அழகியற் கற்கைகள் கிளைகளில் போதனைக்கும் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஏற்பாடு செய்தல் ;

(இ) நுண்கலைகளில் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை நிட்சயப்படுத்தும் நோக்கத்திற்கென பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பரீட்சைகளை நடத்துவதற்கும் பல்கலைக்கழகம் துணை விதிகளால் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்தும் அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியும் பல்கலைக்கழகத்தின் பட்டங்களினதும் அல்லது திப்ளோமாக்களினதும் சான்றிதழ்களினதும் அத்துடன் வேறு கல்விசார் பட்டங்களினதும் அளிப்புக்கு ஆட்களை பல்கலைக்கழகத்திற்கு விதப்புரை செய்வதற்கும் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் அவசியமானவிடத்து ஆணைக்குழுவுடனான ஒருப்பாட்டுடனும் அழகியல் கற்கைகளில் வழங்கப்படவேண்டிய திப்ளோமாக்களையும் சான்றிதழ்களையும் தீர்மானிப்பதற்கும் ;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களையொத்த அல்லது கணிசமானளவு அக்குறிக்கோள்களையொத்த இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் கல்விமான்களையும் மாணவர்களையும் பரிமாறுதல் மூலம் அல்லது வேறு வகையில் ஒத்துழைப்பதற்கும் ;

(ஊ) நிறுவனத்திற்கு அனுமதிகோரும் ஆட்களின் நலனுக்காக, கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சமமான பல்கலைக்கழகங்களிலும் கற்கை இடங்களிலும் சித்தியடைந்த அத்தகைய பரீட்சைகளையும் கற்கையின் காலப்பகுதிகளையும் அல்லது மேற்கொண்ட கற்கையையும் துணைவிதிகளால் குறித்துரைக்கப்படக் கூடியவாறு, நிறுவனத்தின் அத்தகைய பரீட்சைகளுக்கும் கற்கை காலப் பகுதிகளுக்கும் அல்லது அதன் அத்தகைய பாகத்துக்கும் சமமானதாக அங்கீகரிக்குமாறு பல்கலைக்கழகத்தின் மூதவைக்கு விதப்புரை செய்வதற்கும் ஏதேனும் நேரத்தில் அத்தகைய அங்கீகாரத்தை மீளப் பெறுவதற்கும் ;

(எ) நிறுவகத்தில் நோக்கத்திற்கு என நூலகங்களையும், ஆய்வுகூடங்களையும் கலையரங்குகளையும், நாடக அரங்குகளையும் அத்துடன் வேறு கட்டிடங்களையும் அவை போதனையின் நோக்கத்திற்காயினும் சரி, பயிற்சி, ஆராய்ச்சி, அபிவிருத்தி அல்லது உசாத்துணை நோக்கங்களுக்காயினும்சரி, நிறுவுவதற்கும் சாதன வசதிகளையளிப்பதற்கும் பேணுவதற்கும் ;

(ஏ) நிறுவகத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய கற்பித்தல், நிர்வாக மற்றும் வேறு பதவிகளைத் தாபிப்பதனையும் அத்தகைய பதவிகளை அழிப்பதனையும் அல்லது இடைநிறுத்தம் செய்வதையும் பல்கலைக்கழகத்திற்கு விதப்புரை செய்வதற்கும் ;

(ஐ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களையும் புலமைப் பரிசில்களையும் புலமைப் பொருளுதவிகளையும் ஏழைக்கல்வி உதவிகளையும, பதக்கங்களையும் அத்துடன் வேறு பரிசுகளையும் அமைத்துருவாக்குவதற்கும் வழங்குவதற்கும் ;

(ஒ) நிறுவகத்திற்கு வெளியேயுள்ள இடங்களில் பயிற்சி நெறிகளை அல்லது அத்தகைய கற்கைப் பயிற்சி நெறிகளின் பாகங்களை அவற்றிற்கு ஏற்பாடு செய்யும் துணை விதிகளுக்கிணங்க நடத்துவதற்கு ஒழுங்கு செய்வதற்கும் ;

(ஓ) அரசாங்கத்தின் கல்விக் கொள்கைக்கும் அவற்றிற்கு ஏற்பாடு செய்யும் ஏதேனும் விதிக்குமிணங்க கட்டணங்களைப் பெறுவதற்கும் ;

(ஔ) நிறுவகத்தின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்படி தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் இடைநேர்விளைவான அல்லது அவற்றோடு தொடர்புடைய அத்தகைய வேறு எல்லா செயல்களையும் விடயங்களையும் செய்வதற்கும் ;

தத்துவமுடையதாதல் வேண்டும்.

5. நிறுவகம் பின்வருவதனைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) முகாமைச் சபையொன்று ;
(ii) கல்விசார் கூட்டவையொன்று ;
(iii) கற்கைப் பகுதிகள் ;
(iv) கட்டளைச் சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுமங்கள்.

6. நிறுவகத்தின் அலுவலர்கள் பின்வருபவர்களாதல் வேண்டும் :-

(i) பணிப்பாளர் ;
(ii) நிறுவகத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியொன்றை வகிக்கும் வேறெவரேனும் ஆள்.

7. (1) நிறுவகத்தின் முதலாவது பணிப்பாளர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும். அடுத்துறும் பணிப்பாளர் ஒவ்வொருவரும் பல்கலைக்கழகப் பேரவையின் விதப்புரையின் மீது நிறுவகத்தின் முகாமைச் சபையால் (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களைக் கொண்ட குழாம் ஒன்றிலிருந்து ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும் ;

ஆயின் எவ்வாறாயினும், ஆளெவரும் தொடர்ந்து இரண்டு தவணைகளுக்குமேல் பணிப்பாளராக நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) பணிப்பாளர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி அல்லது (3) ஆம் உப்பந்தியின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அவர் அவரது அறுபத்தைந்தாவது வயதைப் பூர்த்திசெய்யும்வரை, அதாவது இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ, அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர், அந்நோக்கத்திற்கென கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் முகாமைச் சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின்மீது ஆணைக்குழுவின் தவிசாளரால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(4) பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட பணிப்பாளர் பணிப்பாளராக அவரது நியமனத்திற்கு உடன்முன்னர் உயர் கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவராக இருந்திருப்பின், அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தில் அவரது நிலையான பதவிக்குத் திரும்பிச் செல்லலாம் ; ஆயின் அவர் அவரது ஓய்வுபெறும் வயதையடைந்திராதவராக இருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர், சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறு ஏதுவின் மீது, அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, துணை வேந்தர், அத்தகைய இயலாமை ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள் பணிப்பாளரின் பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்கு பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை, பல்கலைக்கழகப் பதிவாளர் பணிப்பாளர் பதவிக்குரிய வழமையான கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(6) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுமிடத்து ஆணைக்குழு அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள் பணிப்பாளரின் பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குப் பொருத்தமானதென அது கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை பல்கலைக்கழகப் பதிவாளர் பதவிக்குரிய வழமையான கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

8. (1) பணிப்பாளரே நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்வி அலுவலராகவும் இருத்தல் வேண்டும். இவர் நிறுவகத்தின் முகாமைச் சபையினதும் கல்விசார் கூட்டவையினதும் எல்லா கற்கைச் சபைகளினதும் பதவிவழி உறுப்பினரொருவராதல் வேண்டும். இவர் நிறுவகத்தின் வேறெந்த அதிகாரசபையினதும் அல்லது குழுவினதும் ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிருப்பதற்கும் அதில் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

ஆனால் அவர் வேறேதேனும் அதிகார சபையின் அல்லது குழுவின் உறுப்பினரொருவராக இருந்தாலன்றி அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) சபையால் அதன் சார்பில் காலத்துக்குக்காலம் தமக்கு சட்டப்படி வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க கட்டளைச் சட்டத்தினதும் ஏற்பாடுகள், அவை நிறுவகத்தைத் தொடர்புறுத்தும் அளவுக்கு முறையாக அனுசரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அவர் அந்நோக்கத்திற்கு அவசியமானதென கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவற்றை அவர் பிரயோகிக்கலாம்.

(3) முகாமைச் சபையின் முடிபுகளுக்கும் பயனளிப்பது அல்லது பயனளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர், நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

(5) பணிப்பாளர், பல்கலைக்கழகத் துணைவேந்தரின் பணிப்பின்கீழ் நிறுவகத்தினுள் ஒழுக்காறைப் பேணுவதற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும். ஒழுக்காறுகள் தொடர்பிலான எவையேனும் துணைவிதிகள் இல்லாதவிடத்து, பல்கலைக்கழகத்தின் தோதான துணைவிதிகளும் வேறு விதிகளும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

9. சபை, நிறுவனத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும் என்பதுடன், பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(1) பதவிவழி உறுப்பினர்களாக, அதாவது-

(அ) இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ;

(ஆ) பணிப்பாளர் ;

(இ) பல்கலைக்கழகக் கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஈ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(உ) பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தின் தலைவர் ;

(ஊ) நிறுவகத்தின் கற்கைத்துறை ஒவ்வொன்றினதும் தலைவர்.

(2) உறுப்பினர்களாக, அதாவது-

(அ) பல்கலைக்கழக பேரவையால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு ஆட்கள் ;

(ஆ) பல்கலைக்கழக மூதவையால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்டு பல்கலைக்கழக பேரவையால் நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் ;

(இ) ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட மூன்று ஆட்கள் ;

(ஈ) கல்விசார் கூட்டவையால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு ஆட்கள்.

10. (1) சபைத் தவிசாளர், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராதல் வேண்டும் என்பதுடன், இவர் சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதலும் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் இல்லாத பட்சத்தில் சபை உறுப்பினர்கள் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களிடையேயிருந்து அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குவதற்கென உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி, உறுப்பினரொருவராக விடயத்திற்கேற்ப, அவரது பெயர் குறித்த நியமனத்தின் அல்லது நியமனத்தின் தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மீளப் பெயர் குறித்த நியமனத்திற்கு அல்லது மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவரது பதவிக் காலம் முடியுறுவதற்கு முன்னர் அவரது பதவியை வறியதாக்கினால் அவரைப் பின்னுறுபவர், அவரது பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி, அவரது முன்னுறுபவர் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

ஆயின் மேலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் எந்த அந்தஸ்தின் பயனைக் கொண்டு அவர் சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு தகைமை கொண்டிருந்தாரோ அந்த அந்தஸ்தை அவர் வகிக்கின்ற வரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) சபையின் உறுப்பினராக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் விடயத்திற்கேற்ப, ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அல்லது துணைவேந்தருக்கு முகவரியிட்டு எழுத்துமூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.

(4) லீவுக்கான அனுமதியில்லாமல் தொடர்ச்சியாக சபையில் மூன்று கூட்டங்களுக்கு வருகை தரத்தவறுகின்ற நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சபையின் உறுப்பினர் ஒருவராக அவரது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக்கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் விளைவாக ஏற்படுகின்ற வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கும் அதிகாரி பொருத்தமான ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(5) சபையின் உறுப்பினர்களுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளிப்பதற்கான ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் ஒன்றிற்குக் குறையாதோராயிருத்தல் வேண்டும்.

(7) சபை அவசியமானபொழுது கூடுதல் வேண்டும். ஆயினும் எவ்வாறாயினும் அது ஒவ்வோராண்டிலும் எட்டுத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(8) சபையின் பணிப்பாளர் அவசியமானதென கருதுகின்ற போது அல்லது சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் எழுத்திலான வேண்டுகோள் ஒன்று அவருக்கு கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் அவர் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வேண்டுகோள் அத்தகைய விசேட கூட்டத்தின் நோக்கத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

11. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சபை பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும் :

(அ) நிறுவகத்தின் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தையும். நிதிகளையும் வைத்திருப்பதல், கட்டுப்படுத்துதல் அத்துடன் நிருவகித்தல் ;

(ஆ) சட்டத்தினது ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகம் தொடர்பான எல்லா கருமங்களையும் ஒழுங்குபடுத்துவதும் தீர்மானிப்பதும் ;

(இ) நிறுவகத்திற்கு, குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கென கிடைக்கச் செய்யப்பட்ட எவையேனும் நியதிகளை நிருவகித்தல் ;

(ஈ) நிறுவகத்திற்குச் செய்யப்படும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தின் மரணசாதன கையளிப்புக்கள், நன்கொடைகள், வேறு மானியக்கொடைகள் என்பவற்றை ஆணைக்குழுவின் ஒருபாட்டுடன் பெறுதலும் ஏற்றுக்கொள்ளுதலும் ;

(உ) நிறுவகத்தின் ஆண்டறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் மதிப்பீடு செய்தலும் அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பிப்பதிலும் ;

(ஊ) நிறுவகத்தின் நிதி மதிப்பீடுகளைத் தயார் செய்வதற்கும் அதன் அங்கீகாரத்திற்கும் ஒழுங்கு செய்தலும் அத்தகைய மதிப்பீடுகளை பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பிப்பதிலும் ;

(எ) அழகியல் கற்கைகளில் அளிக்கப்படவேண்டிய பட்டங்களையும் திப்ளோமாக்களையும் சான்றிதழ்களையும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களையும் மற்றும் பின்பற்றப்படவேண்டிய பாடநெறியையும் பயிற்சிகளையும் சித்தியடையவேண்டிய பரீட்சைகளையும் அத்தகைய பட்டங்களுக்கும் திப்ளோமாக்களுக்கும் சான்றிதழ்களுக்கும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களுக்கும் தகைமைபெற விரும்பும் மாணவர்களால் திருப்திப்படுத்தப்படவேண்டிய வேறு நிபந்தனைகளையும் கல்விசார் கூட்டவையுடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தல் ;

(ஏ) எக்கருமம் தொடர்பில் துணை விதிகள் அல்லது விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமம் எதற்கும் துணை விதிகளை அல்லது விதிகளை ஆக்குதல் ;

ஆயின், எவ்வாறாயினும், பாடநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பிலான துணை விதி அல்லது விதி எதுவும் கல்விசார் கூட்டவையில் இருந்து பெற்ற அறிக்கையைப் பரிசீலனை செய்தபின்னர் தவிர ஆக்கப்படுதலாகாது ;

(ஐ) நிறுவகத்தின் பணியைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான கட்டிடங்களையும் வளவுகளையும் தளபாடங்களையும், உபகரணங்களையும் வேறு பொருள்களையும் ஏற்பாடு செய்தல் ;

(ஒ) பல்கலைக்கழகத்திற்கு –

(i) கற்பித்தல், நிர்வாகப் பதவிகளையும் நிறுவகத்தின் நோக்கங்களுக்குத் தேவைபடக்கூடியவாறான அத்தகைய வேறு பதவிகளையும் உருவாக்குதலையும் அத்தகைய பதவிகளை ஒழிப்பதனையும் அல்லது இடைநிறுத்துவதனையும் ; அத்துடன்

(ii) நிறுவகத்திற்கு நியமிக்கப்படவுள்ள ஆசிரியர்களினதும் அலுவலர்களினதும் வேறு ஊழியர்களினதும் தகைமைகளையும் விதந்துரைத்தல் ;

(ஓ) நிறுவகத்தின் ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களை தெரிவிக்கப்படவேண்டிய காரணத்துக்காக இடைநிறுத்துவதற்கு, பதவி நீக்குவதற்கு அல்லது வேறுவகையில் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் ;

(ஔ) நிறுவகத்தின் ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடைய ஆட்களையும் விதந்துரைத்தல் ;

(க) பொருத்தமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினதான நிலையிற் குழுக்களை அல்லது வேளைக்கேற்ற குழுக்களை நியமித்தல் ; அவர்களின் பணித்துறையின் நியதிகளைக் குறித்துரைத்தல், அவற்றின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்தலும், அத்தகைய அறிக்கைகளை திரிபுபடுத்துதல்களுடனோ அல்லது திரிபுபடுத்தலில்லாமலோ அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தல் ;

(ங) சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (VII) ஆம் பந்தியின் கீழ் ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைத் தவிர, பாடநெறிகளுக்கு மாணவர்களின் அனுமதிப்புக்கான தேவைப்பாடுகளை, கல்விசார் கூட்டவையுடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்தினதும் ஆணைக்குழுவினதும் ஒருப்பாட்டுடன் தீர்மானித்தல் ;

(ச) பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உட்பட, நிறுவகத்திற்குரிய பணங்களை நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளை சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்படி எந்தப் பிணையத்தில் நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை முதலீடு செய்வது சட்டமுறையானதோ அந்த ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பில் முதலீடு செய்தல் ; அல்லது

ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் எவையேனும் அத்தகைய பணங்களை இலங்கையில் அசைவற்ற ஆதனத்தின் கொள்வனவில் முதலீடு செய்வதற்கும் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்துவதற்கும் அல்லது உடனடியான செலவீனத்திற்குத் தேவைப்படாத அத்தகைய பணங்களின் ஏதேனும் பாகத்தை, ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பீட்டில் வைத்தல் ;

(ஞ) நிறுவகத்தின் மாணவர்களினது பொது நலனை ஊக்குவிப்பதற்கு நலம்பேணல் குழுவொன்றை நியமித்தலும் அத்துடன் அத்தகைய குழுவின் அமைப்பையும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் குறித்துரைத்தலும் ;

அத்துடன்

(ட) இக்கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிறுவனத்தின் தத்துவங்களுக்கு இடைநேர் விளைவான அல்லது அதன் விளைவாந்தன்மையதான நிறுவகத்தின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல் ;

ஆயின் ஏதேனும் கல்விசார் கருமம் தொடர்பிலான தீர்மானம் எதுவும், கல்விசார் கூட்டவைக்கு அதன்மீது அதன் அபிப்பிராயத்தைப் பதிவு செய்து சபைக்கு அனுப்புவதற்கான வாய்ப்பொன்று முதலில் வழங்கப்பட்டிருந்தாலன்றி, சபையால் நிறைவேற்றப்படுதலாகாது ;

ஆயின், மேலும் அவ்வாறு நிறைவேற்றப்பட்ட ஏதேனும் தீர்மானத்தின்மீது, பல்கலைக்கழகத்தின் ஒருப்பாடுடனன்றி செயற்படுதலாகாது.

இப்பந்தியில் 'கல்விசார் கருமம்' என்பது கல்விசார் கூட்டவையின் கட்டுப்பாட்டிற்கும் பொதுப் பணிப்பிற்கும் அமைந்த ஏதேனும் கருமம் என்று பொருள்படும்.

12. (1) பின்வரும் ஆட்களைக் கொண்ட கல்விசார் கூட்டவையொன்றிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ; இவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கைப் பகுதியினதும் துறைத்தலைவர் ;

(இ) பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் துறைத்தலைவர் ;

(ஈ) சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரான பல்கலைக்கழக கலை, கலாசாரத்வறாகத்தின் வளாக சபையின் நியமித்தர் ஒருவர் ;

(உ) அழகியல் கற்கைத்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு சபையின் விதப்புரையின் மீது பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(ஊ) நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கைத் துறையிலிருந்தும் சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள் அத்துடன் சிரேஷ்ட விரியுரையாளர்கள் ;

(எ) மேலே (ஊ) என்பதிலுள்ள உறுப்பினர்களைத் தவிர்த்து, கற்பித்தலில் ஈடுபட்டுள்ள நிறுவகத்தின் நிரந்தரப்பணியாட்டொகுதியிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(2) கல்விசார் கூட்டவை, சபையுடனான ஒருப்பாட்டுடன், குறித்துரைக்கப்பட்டவொரு நோக்கத்திற்கும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கும் ஒரு ஆளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களை இணைந்துக்கொள்ளலாம் ; ஆனால் அவ்வாறு இணைந்துக்கொள்ளப்பட்ட ஆள் எவரும் தேர்தலுக்கு நிற்பதற்கோ அல்லது கல்விசார் கூட்டவையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கோ உரிமையுடையவராதலாகாது.

(3) பந்தி II என்பதன் (2) ஆம், (4) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன், கல்விசார் கூட்டவையின் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) கல்விசார் கூட்டவையின் கூட்டமொன்றிற்கான கூட்டநடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையில் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோராயிருத்தல் வேண்டும்.

(5) கல்விசார் கூட்டமைப்பு அவசியமானபொழுது கூடுதல் வேண்டும், ஆயினும் அது ஒவ்வோராண்டும் எட்டுத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

13. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும், ஏற்பாடுகளுக்கமைய, கல்விசார் கூட்டவை நிறுவகத்தின் போதான, பயிற்சி, ஆராய்ச்சி அத்துடன் பரீட்சைகள் என்பன மீது கட்டுப்பாட்டையும் பொதுப் பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கல்விசார் கூட்டவை, (1) ஆம் உட்பந்தியால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும் :-

(அ) சபையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தைப் பரிசீலனை செய்தலும் அதன் மீதான அறிக்கை சமர்ப்பித்தலும் ;

(ஆ) கற்கை நெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது பரீட்சைகள் தொடர்பான விடயங்கள் அல்லாத விடயங்களின்மீது சபைக்கு விதப்புரைகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் ;

(இ) ஏதேனும் விசேட விடயத்தை அல்லது எவையேனும் விசேட விடயங்களை கருத்திக்கொண்டு அதன்மீது அல்லது அவற்றின்மீது அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக கல்விசார் கூட்டவையின் உறுப்பினர்கள் அல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தல் ;

(ஈ) கற்கைப் பாடநெறிகளுக்கும், பரீட்சைகளுக்கும் மாணவர்களின் அனுமதிக்கான தேவைப்பாடுகளை சபைக்கு விதப்புரை செய்தல் ;

(உ) ஆசிரியர்களாகவும், பரீட்சகர்களாகவும் அங்கீகரிக்கப்படுவதற்கு பொருத்தமான அத்தகைய ஆட்களை சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஊ) விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளின் சித்தியடைந்து அத்துடன் வேறு விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைத் திருப்திப்படுத்திப் பட்டங்களின், டிப்ளோமாக்களின் சான்றிதழ்களின் அத்துடன் வேறு கல்விசார் பட்டங்களின் அளிப்பிற்குத் தகுதியுடையவர்களான ஆட்களை சபைக்கு விதந்துரைத்தல் ;

(எ) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களினதும், புலமைப்பரிசில்களினதும், புலமைப் பொருளுதவிகளினதும் ஏழைக்கல்வி உதவிகளினதும் பதக்கங்களினதும் வேறு பரிசுகளினதும் அளிப்பிற்கான விதத்தையும் போட்டி நிபந்தனைகளையும் சபைக்கு விதந்துரைத்தல் ;

(எ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களினதும், புலமைப் பரிசில்களினதும், புலமைப் பொருளுதவிகளினதும் ஏழைக்கல்வி உதவிகளினதும் பதக்கங்களினதும் வேறு பரிசுகளினதும் அளிப்பிற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களை சபைக்கு விதந்துரைத்தல்.

(ஐ) இக்கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிறுவகத்தின் தத்துவங்களுக்கு இடைநேர்விளைவான அல்லது அதன் விளைவாந்தன்மையவான கல்விசார் விடயங்கள் தொடர்பில் நிறுவகத்தின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல்.

14. பின்வரும் கல்விக்கிளைகள் தொடர்பில் கற்கைத் துறைகள் இருத்தல் வேண்டும்.

(அ) கர்னாடக இசை ;

(ஆ) நடனம், நாடகம், அரங்கேற்றற் கலை ;

(இ) கட்புல, தொழில்நுட்பவியல் கலை.

(1) கற்கைத்துறை ஒவ்வொன்றும் ஒரு சிரேஷ்ட பேராசிரியராக, பேராசிரியராக, இணைப் பேராசிரியராக அல்லது சிரேஷ்ட விரிவுரையாளராக, இருக்க வேண்டியவரான துறைத் தலைவர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இவர் பணிப்பாளரின் விதப்புரையின் மீது சபையால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(2) துறைத் தலைவர் அவரது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும் ;

(3) லீவு காரணமாக, சுகயீனம் காரணமாக அல்லது வேறு ஏதுவின் காரணமாக துறைத் தலைவர் ஒருவர் மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, சபையானது அத்தகைய காலப்பகுதிக்கு துறைத் தலைவரின் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு ஒரு பேராசிரியரை, இணைப் பேராசிரியரை, அல்லது சிரேஷ்ட விரிவுரையாளரை நியமித்தல் வேண்டும். ஆயினும் துணைத் தலைவர் ஒருவர் ஓய்வுபெறுமிடத்து அல்லது பதவி துறக்குமிடத்து அல்லது வேறு காரணங்களுக்காக மூன்று மாதங்களை விஞ்சியவொரு காலப்பகுதிக்கு அவரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, துறைத்தலைவரின் பதவி வறிதாயிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன்,

(1) ஆம் உட்பிரிவிற்கிணங்க புதிய துறைத்தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

15. நிறுவகத்தின் நிதியாண்டு அரசாங்கத்தின் நிதியாண்டை ஒத்திருத்தல் வேண்டும்.

16. (1) நிறுவகம் நிதியொன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இதில் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்திற்குச் செலுத்தப்படும் எல்லாக் கட்டணங்களும் ;

(ஆ) நிறுவகத்திற்கான உதவியாக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்படுவனவும் ஆணைக்குழுவால் செலவீடு செய்யப்படுவனவுமான எல்லாப்பணங்களும் ;

(இ) வெளிப்புற அல்லது விசாலிப்பு நடவடிக்கைகள் மற்றும் சேவைகள் ஊடாக உண்டுபண்ணப்படும் எல்லா வருமானமும் ;

(ஈ) அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் எல்லா வருமானமும் ;

(உ) எத்தன்மையதுமான ஏதேனும் மூலவளத்திலிருந்து நிறுவகத்திற்குத் திரளும் அத்தகைய வேறு பணங்கள் ;

(2) மேலேயுள்ள வகுதிகள் ஒவ்வொன்றிலுமிருந்து வரும் வருமானம் புறம்பாக கணக்கு கூட்டர் எடுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மாதத்தின்போதும் நிதியங்களினுள் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளினதும் பொழிப்பொன்று வருமானத்தின் தோதான தலைப்பின் கீழ் வகுக்கப்பட்டு அடுத்துறும் மாதத்தின் முடிவுக்கு முன்னர் ஆணைக்குழுவின் தகவலுக்காக அதன் பணிப்பாளரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

17. பின்வருவன பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் :-

(i) நிறுவகத்தின் கணக்குகளை கட்டளைச் சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வடிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல் ;

(ii) நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெற்றுக்கொள்ளுதலும் அத்தகைய புணங்களை கணக்குகளுக்கு தகுந்த தலைப்பில் வரவு வைத்தலும் ;

(iii) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்வதும் ஆணைக்குழுவால் தேவைப்படுத்தப்பட்ட வாறான அத்தகைய மதிப்பீடுகளையும் அடுத்துவரும் ஆண்டிக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் சபைக்காகத் தயாரித்தலும் ;

ஆயின் எவ்வாறாயினும் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக செய்யப்பட்ட மானியங்களிலிருந்து அல்லது குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் நிறுவகத்தின் கணக்குகளில் புறம்பாக கணக்குக் கூட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்கு அல்லது முறையே அத்தகைய மானியங்கள் அல்லது அறக்கொடைகள் எந்த நோக்கத்திற்காக அல்லது குறிக்கோளுக்காக செய்யப்பட்டனவோ அந்த நோக்கத்தை அல்லது குறிக்கோளைத் தவிர்ந்த வேறு நோக்கத்திற்கு அல்லது குறிக்கோளுக்கு அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

18. (1) நிறுவகமானது, ஆண்டுக் கணக்குக் கூற்றொன்றையும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு காலத்துக்காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விவரங்கள் அடங்கிய புள்ளிவிவரங்களைத் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப் புத்தகங்கள் நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

19. உயர்கல்வி நிறுவனமொன்றின் கணக்குகளின் கணக்காய்வுக்கு இயைபானவாறு சட்டத்தின் பாகம் III என்பன அத்தகைய ஏற்பாடுகள் நிறுவகத்தின் கணக்குகளின் கணக்காய்வுக்கும் அது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

20. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதியானது நிறுவகத்தின் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் திறமையுடன் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அவசியமானதெனக் கருதப்படுகின்றவர்களான அத்தகைய அலுவலர்களையும் ஆசிரியர்களையும் வேறு அலுவலர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதி பல்கலைக்கழகத்தால் அதன் சொந்தப் பணியாட்டொகுதியிலிருந்து விடுவிப்பின் மீது ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது விடயத்திற்கேற்ப, ஆணைக்குழுவால் அல்லது பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் பாகம் X இன் ஏற்பாடுகள், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் அலுவலர், ஆசிரியர் அல்லது வேறு ஊழியர் ஒருவர் முழுநேர அடிப்படையொன்றின் நிறுவகத்தின் சேவைக்கென விடுவிக்கப்படுமிடத்து, நிறுவகம் பல்கலைக்கழகத்தில் அவரது நிலையான பதவியின் சம்பளத்தையும் படிகளையும் அவருக்குச் செலுத்துதல் வேண்டும். வேறு ஏதேனும் விடயத்தில் நிறுவகம் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியர்களுக்கு பல்கலைக்கழகத்துடனான ஆலோசனையுடன் அது தீர்மானிக்கக்கூடியவாறும் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறும் செலுத்தலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, பணிப்பாளரின் பணிப்பிற்கும் ஒழுங்காற்றுக் கட்டுப்பாட்டிற்கும் அமைந்தோராதல் வேண்டும்.

(5) பல்கலைக்கழத்தின் பணியாட்டொகுதிக்கும் மாணவர்களுக்கும் ஏற்புடைத்தான ஒழுக்காற்று விதிகளும் நடவடிக்கை முறைகளும் நிறுவகத்தவர்களுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

21. சட்டத்தின் பாகம் XIX நிறுவகத்தால் ஆக்கப்படும் துணைவிதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் விதிகளுக்கும் அத்துடன் அவை தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

22. நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் செயல் தீர்மானம் அல்லது நடவடிக்கைமுறை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று அல்லது வெற்றிடங்கள் இருப்பதன் காரணமாக அல்லது அத்தகைய உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது எவையேனும் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

23. எந்த எதிர்பாரா சம்பவங்களுக்கு இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்படவில்லையோ அந்த எவையேனும் எதிர்பாராச் சம்பவங்களைத் தீர்ப்பதற்கு பல்கலைக்கழகத்தின் விதப்புரையின்மீது நடவடிக்கை எடுப்பதற்கான தத்துவம் ஆணைக்குழுவுக்கிருத்தல் வேண்டும்.

24. இக்கட்டளைச் சட்டத்தில்-

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப்பொருள்படும்;

"தோதான சாதனம்" என்பது, சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"ஆசிரியர்" என்பது சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6-416

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.